10/=

பக்கங்கள் 06

# எதிரொலி

Ethiroli

அதிர்வு 30 சனிக்கிழமை ஜூன் 03 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## பள்ளிவாசல் மீது பெற்றோல் குண்டு வீச்சு



திருகோணமலையில் பள்ளிவாசல் மீது இன்று அதிகாலை பெற்றோல் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது.

திருகோணமைலை பெரிய கடையில் அமைந்துள்ள ஜூம் ஆ பள்ளிவாசல் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. தொழுகைக் கான விரிப்புகள் சில எரிந்து நாசமாகின.

நோன்புப் பெருநாள் நடக்கும் இக்காலத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. இது குறித்து பல தரப்பினரும் கவலை வெளியிட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## முகமூடிக் கொள்ளையர்கள் வடமராட்சியில் கைவரிசை!

நேற்றும் இரு வீடுகளில் களவு

முகமூடியுடன் வீட்டுக்குள் நுழைந்த 6 பேர் கொண்ட குழு ஒருவரை தாக்கி காயப்படுத்தியதுடன், 5 இலட்சம் ரூபா பணம், 5 பவுண் நகைகளை கொள்ளையிட்டு சென்றுள்ளது.

இந்தச்சம்பவம் இன்று சனிக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் இடம்பெற்றுள்ளது.

திவாகரன் என்பவரின் வீட்டுக்குள் நுழைந்த 6 பேர் 04

## எச்சரிக்கை

தென்னிலங்கையின் பெரும்பாலான பகுதிகளில் இன்றும் மழை தொடர்கிறது. இதனால் மண் சரிவு அபாயமுள்ள பிரதேசங்களில் வாழும் மக்களை எச்சரிக்கை யாக இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் எச்சரித்துள்ளது.

மண்சரிவு அபாயமுள்ள பிரதேசங்களில் வசிப்பவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயருமாறும் அந் நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை, காலி, மாத்தறை, அம்பாந் தோட்டை, நுவரேலியா மாவட்டங்களுக்கு விடுக்கப் பட்ட மண்சரிவு எச்சரிக் கையை நீடிக்குமாறு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது. (இ)

## கேப்பாபிலவு படையினர் வெளியேற மாட்டார்கள்?

கேப்பாபிலவில் இருந்து வெளியேறுவதற்கு இராணு வம் கூறிய அவகாசம் நாளை முடிவடைகின்ற போதும், அங்கிருந்து படையினர் வெளியேறுவதற்கான எந்த அறிகுறியும் இல்லை என்று அந்தப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

கேப்பாபிலவு மக்கள் தொடர்ச்சியாக நடத்திய போராட்டத்தால் "மூன்று மாத அவகாசத்தில் படையி னர் வெளியேறுவர்" என்று தெரிவிக்கப்பட்டது.

அவ்வாறு வெளியேறுவதற் காக படைத்தரப்பு கோரிய பணத்தையும் வழங்கிவிட்ட தாக மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித்திருந்தார்.

எனினும் படையினர் கோரிய அவகாசம் நாளை முடிகின்றபோதும், அந்தக் காணிகளை விடுவிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை என மக்கள் தெரிவிக் கின்றனர். (அ-33)

## பாதிக்கப்பட்டவர்களுக்காக.....



தென்னிலங்கையில் இயற்கை அனர்த்தம் நிகழ்ந்த பகுதிகளுக்கு எதிர்க்கட்சித்தலை வர் சம்பந்தன், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோர் சென்று, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பொருட்களை வழங்கினர்.(அ)

## கல்வியியல் கல்லூரிக்கு தெரிவானோர் விபரம் வெளியானது

2014 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர் தரப் பரீட்சைப் பெறுபேறு களின் அடிப்படையில் தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு தெரிவு செய்யப்பட்டவர்க ளது பெயர்ப்பட்டியல் இன்று வெளியிடப்பட்டுள்ளது. http://www.moe.gov.lk என்ற கல்வியமைச்சின் உத்தியோக பூர்வ இணையத்தளத்தில் தெரிவுசெய்யப்பட்டவர்களது பெயர் விபரங்களைப் பார்வையிட முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(அ)



## வடக்குப் பட்டதாரிகளுக்கு ஜூன் 6இல் ஆசிரிய நியமனம்

வடமாகாணப் பாடசாலைகளில் நிலவும் கணித, விஞ்ஞான பாட ஆசிரியர்கள் வெற்றிடங் களை நிரப்ப ஜூன் 06 ஆம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது . இந்தத் தகவலை வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இரவீந்திரன் தெரிவித்தார்.

"321 பட்டதாரிகள் நேர்முகத்தேர்வுக்கு தோற்றியிருந்தனர்.

தகுதியானோருக்கு ஜூன் 6 ஆம் திகதி நியமனங்கள் வழங்கப்படும்.இதற்கான தனியான அழைப்புக் கடிதங்கள் குறித்த பட்டதாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும்" எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)

## 'அமெரிக்காவே உதவு'

### காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் கதறல்



"நாம் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியை நாடுகின்றோம்" என கோரி வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஊர்வலம் ஒன்றினை இன்று மதியம் மேற்கொண்டனர்.

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் இன்று 100 ஆவது நாளை எட்டியது. இதனை முன்னிட்டு வவுனியா கந்தசாமி கோவிலில் விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அங்கிருந்து பேரணியாக பசார் வீதி ஊடாகச் சென்று ஹொரவப்பொத்தானை வீதியை அடைந்து அதனூடாக கண்டி வீதிக்கு சென்று தமது போராட்ட தளத்தை வந்தடைந்தனர்.

இதன்போது, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றியம் என்பவற்றின் கொடிகளை ஏந்தியிருந்தனர்.

"அமெரிக்காவே எங்களுக்கு உதவு" என்றும் அவர்கள் குரலெழுப்பினர்.(ஆ)

## உயர்தரப் பரீட்சை ஒத்திவைப்பு?

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இடம்பெறவுள்ள உயர்தர பரீட்சையைப் பிற்போடுவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

"வெள்ளத்தில் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் தமது வழமையான கற்றல் நடவடிக்கையை மேற்கொள்ள இன்னும் சில காலம் எடுக்கும் . எனவே உயர்தரப்பரீட்சையை பிற்போடுவதன் மூலம் அந்த மாணவர்களுக்கு நிவாரணம் கிடைக்கும்" என தென்மாகாண சபை இணை அமைச்சர் யு.ஜீ.ட. ஆரியதிலக்க ஜனாதிபதி யிடம் சுட்டிக் காட்டினார். அதன் பின்னரே உயர்தரப் பரீட்சையை பிற்போடுவது குறித்து ஆராய்வதாக ஜனாதிபதி தெரிவித்தார். (அ)

## வரணியில் கத்திக்குத்து

மரணச் சடங்கொன்றில் கலந்து கொண்ட இளைஞர் ஒருவர் கத்திக் குத்துக்கு இலக்கானார். இந்தச் சம்பவம் தென்மராட்சியின் வரணி வடக்கில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன் தினம் குறித்த பகுதியில் ஒரு மரணச் சடங்கு நடைபெற்றது. இதன்போது அங்கு கலந்து கொண்டவர்களிடையே ஏற்பட்ட முரண்பாடு மோதலாக வெடித்தது. இதன்போது 24 வயதான இளைஞர் ஒருவருக்கு காலிலும், தொடையிலும் ஒருவர் கத்தியால் சரமாரியாக் குத்தினார். பாதிக்கப்பட்டவர் கொடுத்த முறைப்பாட்டின் அடிப்படையில், 'கத்தி' விளையாட்டுக் காட்டியவர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-21)



# இன்றும் மண்சரிவு: 20 பேர் இடம்பெயர்வு

அம்பகமுவ பிரதேச செயலகத்துக்குட்பட்ட அட்டன் டிக்கோயா பெரிய மாணிக்கவத்தை தோட்டம் 2 ஆம் பிரிவில் இன்று அதிகாலை மண்சரிவு ஏற்பட்டது. இதில் இரு வீடுகள் பாதிப்படைந்தன. மேலும் மண்சரிவு ஏற்படும் வாய்ப்பு இருப்பதாலும், தொடர்ச்சியாக மழை பெய்வதாலும் 4 குடும்பங்களைச் சேர்ந்த 20 பேர் இடம் பெயர்ந்துள்ளனர். இவர்கள் அங்குள்ள பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ஆ)

## முழங்காவில் திருட்டு சம்பவம்
# அரசியல்வாதியின் மகன் கைது



முழங்காவிலில் இடம்பெற்ற திருட்டுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் அரசியல்வாதி ஒருவரின் மகன் கைது செய்யப்பட்டுள்ளார்.

முழங்காவில் - நாச்சிக்குடாவில் கடந்த செவ்வாய்க்கிழமை பூட்டிய வீட்டுக்குள் நுழைந்து 10 பவுண் நகைகள், 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பணம் மற்றும் கைபேசி என்பன களவாடப்பட்டன. இது குறித்து முழங்காவில் பொலிஸில் முறையிடப்பட்டது.

விசாரணையில் இறங்கிய பொலிஸார் கைபேசியின் "எமி" இலக்கத்தைக் கொண்டு திருடியவரைக் கண்டுபிடித்துக் கைது செய்தனர். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் மயானம் ஒன்றுக்குள் புதைத்து வைக்கப்பட்ட 10 பவுண் நகைகளும் 2 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டது.

களவாடிய பணத்தில் 10 ஆயிரம் ரூபாவை அந்நபர் செலவுசெய்துவிட்டதாக விசாரணைகளில் தெரிய வந்தது. கைதான சந்தேகநபரின் தந்தையார் கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்டவர். சந்தேகநபர் அப்பகுதி கிராம சேவகரின் கணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# புதிய அரசமைப்பு இந்த வருடம்

புதிய அரசமைப்புச் சட்டம் இந்த வருடம் நிறைவேற்றப்படும் என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கடந்த தேர்தலில் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறைக்குப் பதிலாக புதிய அரசமைப்பு சட்டம் கொண்டு வரப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்டது.

இதனை நிறைவேற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. அரசமைப்பின் சில விடயங்கள் மக்கள் கணிப்புக்கு விடப்படும்- என்றார்.



## வெளிநாட்டில் வசிப்பவர்களும்
# வாக்காளராகலாம்

இலங்கைக் குடியுரிமையுடன் வெளிநாட்டில் வசிப்பவர்கள் வாக்காளர் பட்டியலில் தமது பெயர்களைச் சேர்க்க முடியும் எனத் தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

நடப்பு ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாராகி வருகிறது. வரும் 15 ஆம் திகதி வரை மக்கள் தங்களை வாக்காளர்களாகப் பதிய முடியும். தற்காலிகமாக வெளிநாடுகளில் வசிப்பவர்களின் பெயர்களையும் அவர்களின் உறவினர்கள் வாக்காளர் பட்டியலில் பதிய முடியும். இதன்போது அவர்களின் கடவுச்சீட்டு இலக்கங்களை வழங்க வேண்டும்.

இரட்டைக் குடியுரிமை பெற்றவர்களும் தங்கள் குடியுரிமைச் சான்றிதழின் இலக்கத்தை வழங்கி வாக்காளர் பட்டியலில் தமது பெயரை சேர்த்துக் கொள்ள முடியும் என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட் தெரிவித்துள்ளார். (இ)



# வேலைக்கு காசு

உலக உணவு திட்டத்தின் கீழ் காசுக்கான வேலையின் ஆரம்ப நிகழ்வு கரணவாய் மேற்கு கிராம சேவையாளர் பிரிவு தலைவல்லைக் குளத்தில் இன்று இடம்பெற்றது. (அ-11)

# 16 கோடி ரூபா ஒதுக்கீடு



வெள்ளம் மற்றும் மண்சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொருள்களை வழங்க 16.6 கோடி ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

உலர் உணவு, சமைத்த உணவு, மருந்துகள் மற்றும் குழந்தைகளுக்கான உணவு, பால்மா பொருட்களை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட இந்தத் தொகை பிரதேச செயலகங்களிடம் நேரடியாக வழங்கப்படும். பிரதேச செயலரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இதற்கான பணிகள் முன்னெடுக்கப்படும்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு மேலும் பணம் தேவைப்படும் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. உதவிகள் தேவைப்படுவோர் 117 என்ற இலக்கத்தின் ஊடாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தை நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 3 மாதங்களுக்கு முன்னர் திருடியோர் மாட்டினர்

மூன்று மாதங்களுக்கு முன்னர் பிரதேச செயலர் ஒருவரின் வீட்டில் திருடினர் என்ற சந்தேகத்தில் மூவர் ஓமந்தையில் கைது செய்யப்பட்டுள்ளனர் .

கைது செய்யப்பட்டவர்கள் குறித்த பிரதேச செயலர் வீட்டில் முன்னர் கட்டட வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் மூன்று மாதங்களுக்கு முன்னர் பிரதேச செயலர் இல்லாத சமயம் அங்கிருந்த பணத்தையும், நகைகளையும் அபகரித்திருந்தனர். பொலிஸாரின் தீவிர விசாரணையால் மூன்று மாதங்களின் பின்னர் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளனர். (ஆ)

# வடக்கில் நீளும் வறட்சி 2 1/2 இலட்சம் பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களில் நீடிக்கும் வறட்சியால் இரண்டரை இலட்சம் பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நீடிக்கும் வறட்சியால் தீவகப் பிரதேசங்களில் குடிதண்ணீருக்குப் பெருந் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இங்கு ஒரு இலட்சத்து 30 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். முல்லைத்தீவில் ஆறு பிரதேச செயலகங்களை சேர்ந்த ஒரு இலட்சத்து 15 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கைப் போன்று கிழக்கு மாகாணத்திலும் வறட்சி நீடிக்கிறது. அங்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் குடிதண்ணீருக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. (இ)

# குற்றவாளிகளைத் தண்டியுங்கள்!



திருகோணமலை, மல்லிகைத்தீவில் மூன்று சிறுமிகள் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டமையைக் கண்டித்தும் குற்றவாளிகளுக்கு தகுந்த தண்டனையை வழங்குமாறு கோரியும் மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டமொன்று இன்று நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட இளைஞர்கள் ஒன்றிணைந்து மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக நடத்திய இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருமளவான இளைஞர், யுவதிகள் மற்றும் சிறுவர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு தமது கண்டனத்தை பதிவு செய்தனர். (இ)

# பிரான்ஸில் மோடி



ஜெர்மனி, ஸ்பெயின், ரஷ்யா மற்றும் பிரான்ஸ் ஆகிய நான்கு நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ள இந்தியப் பிரதமர் மோடி , பயணத்தின் இறுதிக்கட்ட மாக நேற்று பிரான்ஸைச் சென்றடைந்தார். பரிஸ் விமான நிலையத் தில் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப் பட்டது. பிரான்ஸில் புதிதாக தேர்ந்தெடுக்கப் பட்ட அதிபர் இமானு வேல் மக்ரோனை , மோடி சந்தித்து பேசவுள்ளார். இந்தச் சந்திப்பின் போது, பயங்கரவாதம், என்.எஸ்.ஜி என்னும் அணு விநி யோக கூட்டமைப்பில் உறுப் பினராகும் முயற்சி, பருவ நிலை ஒப்பந்தம் உள் ளிட்ட முக்கிய விவகாரங் கள் குறித்து ஆலோசனை நடத்தப்படவுள்ளது.(இ)

# கட்சிப் பணிகளை தொடர்வேன்

## சொல்கிறார் தினகரன்

“சென்னை சென்றதும் மீண் டும் கட்சிப் பணிகளைத் தொடர்வேன். என்னை கட்சியில் இருந்து நீக்கிய தாக யாரும் அறிவிக்க வில்லை. என்னை கட்சி யில் இருந்து நீக்கும் அதி காரம் பொதுச் செயலாள ருக்கு மட்டுமே உண்டு. நான் சிறையில் இருந்த போது தமிழகத்தில் என்ன நடந்தது என்று தெரியாது. மத்திய அரசுக்குப் பணிந்து தமிழக அரசு செயற் படாது.” டில்லியிலிருந்து இன்று சென்னை திரும்பிய போதே டி.டி.வி. தினகரன் மேற்கண்டவாறு தெரி வித்தார். இரட்டை இலைச் சின்னத் தைப் பெற 50 கோடி ரூபா லஞ்சம் கொடுக்க முயன்ற தினகரன் கைதாகி டில்லி திஹார் சிறையில் அடைக் கப்பட்டார். அவ ருக்கு நேற்றுப் பிணை வழங் கப்பட்டமை தெரிந்ததே.

# முட்டாள் முடிவு

## ஒபாமா காட்டம்



‘பரிஸ் பருவகால ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகும்’ என்ற டிரம்பின் முடிவுக்கு எதிர்ப்பலை வலுத்து வருகின்றது.அமெரிக்கா முட்டாள்தனமாக பரிஸ் ஒப்பந்தத்தில் இருந்து,விலகி னாலும், தொடர்ந்து இந்த உடன்பாட்டில் இருக்கப்போவ தாக ரஷ்யா, சீனா , பிரான்ஸ். பிரிட்டன் ஆகிய நாடுகள் அறிவித்துள்ளன. டிரம்பின் இந்த முடிவை அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஒபாமா கடுமையாகக் கண்டித்துள்ளார். “ பரிஸ் பருவநிலை மாற்ற உடன்பாட்டில் இருந்து அமெரிக்க விலகினால், புதிய தொழில் வாய்ப்புகளை உடனடியாக அடைய முடியும். ஆனால் இந்த முடிவு எதிர்காலத்தை நிராகரிப்பதாக அமையும்.இந்த முட்டாள்தனமான முடிவு உலகளாவிய ரீதியில் அமெரிக்காவுக்கு பாதிப் பையே ஏற்படுத்தும்” என ஒபாமா தெரிவித்துள்ளார்.(இ)


# கருணாநிதிக்கு 94



தி.மு.க. தலைவர் மு.கருணாநிதியின் 94 ஆவது பிறந்த நாள், தமிழ்நாடு சட்டப் பேரவை பணியின் வைரவிழா என்பன இன்று மாலை 5 மணிக்கு சென்னையில் இடம்பெறுகின்றன.
இந்த நிகழ்வில் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி பிற மாநிலங்களின் முதல்வர்கள் மற்றும் முக்கிய தலைவர்கள் பங்கேற்கின்றனர்.
உடல்நலக் குறைவு காரணமாக படுக் கை யில் இருக்கும் கருணாநிதி விழாவில் பங் கேற்கமாட்டார் எனக் கூறப்படுகின் றது.
இதேவேளை விழாவுக்கு வரும் தலைவர் களும் கருணாநிதியைச் சந்திக்க மாட்டார் கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
கருணாநிதியின் பிறந்த நாள், சட்டப் பேரவைப் பணி வைரவிழாவுக்கு இந்திய ஜனாதிபதி உள்ளிட்ட முக்கிய தலைவர்களும், தமிழ்நாடு கட்சிகளின் தலைவர்களும் வாழ்த்துத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.
தனது பிறந்தநாளில் வழமையாக தொண்டர்களைச் சந்தித்து கருணாநிதி வாழ்த்துக்களை பெறுவது வழமை. ஆனால் உடல்நலன் கருதி இம்முறை அவர் தொண்டர்களை சந்திக்க வில்லை.

# காப்பாற்றுங்கள்

## கிளிவெட்டி சிவன்கோயிலை



சிதைவடைந்த நிலையில் உள்ள கிளிவெட்டி சிவன் கோயிலை பாதுகாக்க தமிழ் அரசியல்வாதிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென திருகோண மலை மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மிகவும் தொன்மையான இந்த ஆலயம் தற்போது சிதை வடைந்து காணப்படு கிறது. இது பரம்பரை பரம்பரையாக தமிழ் மக் கள் வழிபட்டு வந்த சிவன் கோயிலாக உள்ளபோதும், அங்கு சிவன் இருந்த ஆதார மில்லை என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது. அத்துடன் இதனை ஒரு பௌத்த சின்னமாக மாற்றவும் திரைமறைவு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. தமிழ் அரசியல் வாதிகள் உடனடியாகச் செயற்பட்டு, இந்த ஆலயத்தை காக்க நடவடிக்கை எடுக்க வேண்டு மென மக்கள் தரப்பில் கோரப்பட்டுள்ளது. (இ)



வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை இலங்கைத் தொழி லாளர் காங்கிரஸ் பிரதிநிதிகள் வள்ளத்தில் சென்று பார்வை யிட்டனர். (இ)

# முன்பள்ளிக்கு முதற்கட்டவேலை



மன்னார், எருக்கலம்பிட்டி கிராமத்தில் கைத் தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஸாட் பதியுதீனின் மீள்குடியேற்ற அதிகார சபை மூலமாக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்துபாலர் பாடசாலை அமைப்பதற்கான முதற்கட்ட வேலைகள் இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வில் அமைச்சரின் இணைப்புச் செயலாளர் என.எம்.முஜாஹிர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (இ)

# கிளிநொச்சியிலும் இனி மருத்துவப் பயிற்சிகள்

கிளிநொச்சி மாவட்டப் பொதுவைத்திய சாலைக்கு உள்ளகப்பயிற்சி மருத்துவர் களை நியமிப்பதற்கான அனுமதியினை மத்திய சுகாதார அமைச்சுக்கு கடந்த வாரம் இலங்கை மருத்துவ சபை வழங்கியுள்ளது.
வடமாகாணத்தில் தற்போது யாழ். போதனா வைத்தியசாலை மற்றும் வவுனியா பொது மருத்துவமனை ஆகியவற்றில்மட்டுமே மருத்துவர்கள் உள்ளகப் பயிற்சிக்காக நியமிக்கப்பட்டு வருகின்றனர்.
அந்த வரிசையில், எதிர்வரும் கார்த்திகை மாதம் முதல் மருத்துவர்களது உள்ளகப் பயிற்சிக்கான முதலாவது அணி கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலைக்கு நியமிக் கப்படலாம் எனத் தெரியவருகிறது. (இ-13)



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக யாழ்ப்பாணத்தில் சேகரிக்கப்பட்ட நிவாரணப் பொருள்களை வடக்கு ஆளுநர் ரெஜினோல்ட் கூரே யும் வடமாகாண சபை உறுப்பினர் அகிலதாஸ் சிவக்கொழுந்துவும் இன்று காலை களுத்துறை அரச அதிபரிடம் ஒப்படைத்தனர். (அ -11)

## நவிண்டில் வி.க. உதைபந்தாட்டத் தொடர்:
# சுப்பர்-8இல் றேஞ்சர்ஸ்



நவிண்டில் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற போட்டியில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி வெற்றிபெற்றது.

இந்த ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து வேலனை ஐயனார் அணி களமிறங்கியது.

ஆரம்பம் முதலே இரு அணிகளும் சிறப்பாக ஆடியதால் முதல் பாதியில் கோல் எதுவும் விழவில்லை. பின்னர் இரண்டாவது பாதியின் 7ஆவது நிமிடத்தில் றேஞ்சர்ஸ் அணியின் நஜித் உதைந்த பந்து கோல் எல்லைக்குள் புக, அந்த அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

பின்னர் எந்த அணியாலும் கோல் எதையும் போட முடியாமல் போனது. இதனால் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற றேஞ்சர்ஸ் அணி, இதன் மூலம் அந்த அணி சுப்பர் 8 சுற்றுக்குத் தகுதிபெற்றுள்ளது. (ஐ-23)



## இந்தியாவால் பாகிஸ்தான் நொறுக்கப்படும்

சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட்டில் பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியாவுக்கே வெற்றி வாய்ப்பு அதிகம் உள்ளது என பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அப்ரிடி கருத்துத் தெரிவித்துள்ளார்.

“விராட் கோலி தலைமையிலான இந்திய அணி வலுவான துடுப்பாட்டம் மூலம் எந்தவிதமான பந்து வீச்சையும் நொறுக்கித் தள்ளத் தயராகவுள்ளது.பந்து வீச்சிலும் இந்தியாவை குறை சொல்ல முடியாது” என அவர் மேலும் கூறியுள்ளார்.

இந்தியா - பாகிஸ்தான் அணிகள் நாளையதினம் மோத வுள்ள நிலையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளமை பாகிஸ் தான் கிரிக்கெட்டில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

## திருடர்களை கட்டுப்படுத்த ஜிமெயிலில் புதிய வசதி

கூகுள் நிறுவனத்தின் மின்னஞ்சல் சேவையான ஜிமெயிலை ‘ஈமெயில் பிஸ்ஸிங்’ எனப்படும் ஹக்கிங் முறையை தவிர்ப்பதற்கு மென்பொருள் ஒன்றை கூகுள் உருவாக்கியுள்ளது.

இம்மென்பொருளானது 99.9 சதவீதம் துல்லியமாகச் செயற்படுகிறது என கூகுள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும் 50 தொடக்கம் 70 சதவீதம் வரையான மின்னஞ்சல் களை ஸ்பார்ம் என இம் மென்பொருள் காட்டுகிறது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன் காரணமாக எதிர் காலத்தில் ஜிமெயில் சேவையை பாதுகாப்பான முறையில் பயனர் கள் பெற்றுக்கொள்ள முடியும் என நம்பப்படுகின்றது. (ஓ)

36 மில்லியனுக்கும் அதிகமான அண்ட்ரொய்ட் கைத்தொலைபேசிகளை இணையம் மூலம் விளம்பரங்களுக்குக் கொண்டு செல்லும் தீய மென்பொருள் தாக்கியுள்ளது என பாதுகாப்பு நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

கூகுள் பிளே ஸ்டோரில் உள்ள சுமார் 50 செயலிகளில் ஜூடி என்ற கதாபாத்திரத்தின் பெயரில் போலி தீய மென்பொருள் இருந்தமை கண்டு பிடிக்கப் பட்டுள்ளது என ஆராய்ச்சியா ளர்கள் தெரிவித்துள் ளனர். (ஓ)

## எச்சரிக்கை



## பயஸ் பின்னடைவு சானியா முன்னேற்றம்



கலப்பு இரட்டையர் முதல் சுற்றில் இந்தியாவின் லியாண்டர் பயஸ், சுவிற்சர்லாந்தின் மார்ட்டினா ஹிங்கிஸ் ஜோடி அதிர்ச்சித் தோல்வியடைந்துள்ளது.

ஆண்கள் இரட்டையரிலும் லியாண்டர் பயஸூக்கு ஏமாற்றமே மிஞ்சியது. அவரும், அமெரிக்காவின் ஸ்கொட் லிப்ஸ்கியும் கைகோர்த்து 2ஆவது சுற்றில் டேவிட் மாரெரோ- டாமி ராபிரிடோ (ஸ்பெயின்) கூட்டணியிடம் வீழ்ந்தனர்.

அதேவேளை, ஆண்கள் இரட்டையர் 2ஆவது சுற்றில் இந்தியாவின் ரோகன் போபண்ணா, உருகுவேயின் பாப்லோ கியூவாஸ் ஜோடி வென்றது. இதே போல் கலப்பு இரட்டைய ரில் இந்தியாவின் சானியா மிர்ஷா, குரோஷியாவின் இவான் டோடிக் ஜோடி 2ஆவது சுற்றுக்கு முன்னேறியது. (ஐ)

## ஸ்ருதி இடத்தில் ஹன்சிகா

சுந்தர்.சி இயக்கத்தில் ஸ்ரீதேனாண்டாள் பிலிம்ஸ் பிரமாண்டமாக தயாரிக்கும் ‘சங்கமித்ரா’. படத்தின் இளவரசியாக நடிக்கவிருந்த ஸ்ருதிஹாசன் விலகியதையடுத்து அவருக்குப் பதிலாக ஹன்சிகா நடிக்கவுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கான ஹன்சிகாவுடன் பேச்சு நடக்கிறது எனச் சொல்லப்படுகிறது. எனவே ‘சங்கமித்ரா’ படத்தின் இளவரசியாக ஹன்சிகா நடிப்பதற்கு அதிக வாய்ப்பு இருப்பதாகத் தெரிகிறது.

ஏற்கனவே சுந்தர் சி இயக்கத்தில் சில படங்களில் ஹன்சிகா நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ)

## நான்காவது சுற்றுக்கு தயார்!





பிரெஞ் ஓபன் டென்னிஸ் தொடரில் நேற்று நடைபெற்ற மூன்றாவது சுற்று முக்கிய ஆட்டங்களில் ஜோகோவிச், நடால், முகுருஸா மற்றும் வீனஸ் வில்லியம்ஸ் ஆகியோர் வெற்றிபெற்றனர்.

ஆண்களுக்கானமூன்றாவது சுற்றில் ஆர்ஜென்ரீனாவின் சுவாட்ஸ்மனை எதிர்கொண்ட செர்பியாவின் ஜோகோவிச் 5:7, 6:3, 3:6, 6:1, 6:1 என்ற சுற்றுக் கணக்கில் வெற்றிபெற்றர். மற்றொரு ஆட்டத்தில் ஸ்பெய்னின் ரபேல் நடால் 6:0, 6:1, 6:0 என்ற சுற்றுக் கணக்கில் ஜோர்ஜியாவின் நிகோலஸை வெற்றிபெற்றார்.

பெண்களுக்கான ஆட்டத்தில் ஸ்பெய்னின் முகுருஸா 7:5, 6:2 என்ற சுற்றுக்கணக்கில் ரஷ்யாவின் யூலியாவையும், அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் 6:3, 6:1 என்ற சுற்றுக் கணக்கில் பெல்ஜியத்தின் எலியை வீழ்த்தினார்.

ஏனைய ஆட்டங்களில் கரோலின் வொஸ்னியாக்கி, சமந்த ஸ்ரொஸர், ஸ்வெல்ரனா, ஆகியோர் வெற்றிபெற்றனர். (ஐ)



## சினிமாவிலிருந்து விலக முடிவு

இந்தியா முழுவதும் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் அனைத்து மொழி சினிமாப் படங்களுக்கும் 28 சதவீத சரக்கு மற்றும் சேவை வரி விதிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இதற்கு தமிழ்த் திரைப்படத் துறையினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள்.

இதுகுறித்து நடிகர் கமல்ஹாசன் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

“ஹொலிவூட் படங்கள், ஹிந்திப் படங்கள், பிராந்திய மொழிப் படங்கள் அனைத்துக்கும் ஒரே மாதிரி 28 சதவீத வரி விதிக்கப்படும் என்று அறிவித்திருப்பது முறையல்ல.

ஹிந்திப் படங்களுக்கான சந்தையும், பிராந்திய மொழிப் படங்களுக்கான சந்தையும் வெவ்வேறானவை. சினிமாத் தொழிலில் கூடுதல் வரியைத் திணித்தால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும். எனக்கும் அந்த நிலைமை வரும். அப்போது நான் உட்பட எல்லாக் கலைஞர்களும் சினிமாவை விட்டு விலக வேண்டிய சூழல்தான் ஏற்படும்” என்றார். (ஓ)

## உசன் கந்தசுவாமி கோயிலில் இன்று திருக்கைலாயம்



யாழ். தென்மராட்சியிலுள்ள உசன் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த 31ஆம் திகதி ஆரம்பமானது.
மஹோற்சவத்தின் ஓர் அங்கமாக இன்று வெள்ளிக்கிழமை திருக்கைலாய வாகனத்திருவிழா நடைபெறவுள்ளது.
அத்துடன் எதிர்வரும் 8 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், ஒன்பதாம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.(இ)

## டெங்கு 56887

2017ஆம் ஆண்டின் கடந்த 06 மாத காலத்தில் மட்டும் 56,887 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டனர் என்று தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது. இந்த டெங்கு நோயாளர்களில் சுமார் 42.55 வீதமானோர் மேல் மாகாணத்திலேயே இனங்காணப்பட்டுள்ளனர்.
அதேநேரம் கடந்த 16 வாரத்தில் தான் அதிகமானோர் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## இன்றைய கருத்தோவியம்




நன்றி: அவந்த ஆட்டிக்கல

## சுவிஸ் தூதரை சந்தித்தார் ரவி



வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க, இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் ஹெய்ன்ஸ் வொக்கர் நிடர்கூன்க்கைச் சந்தித்தார்.
வெளிவிவகார அமைச்சில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், இலங்கையில் இடம்பெற்ற அனர்த்த நிலைமைகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமது அனுதாபங்களை சுவிஸ் தூதர் தெரிவித்தார்.
அத்தோடு தற்போதைய நிலைமைகளையும் அவர் கேட்டறிந்து, மக்களின் துயர் துடைக்க சுவிஸ் தொடர்ந்தும் தனது பங்களிப்பைச் செய்யும் எனவும் உறுதியளித்தார். (ஆ-5)

## மாகாண காணிப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கவும்



காணி அமைச்சராக கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்ட அமைச்சர் கயந்த கருணாதிலக்க அமைச்சின் அதிகாரிகளுடன் முக்கிய சந்திப்பொன்றை நடத்தியுள்ளார்.
இதன்போது நாட்டில் உள்ள அனைவருக்கும் காணிகளை பெற்றுக்கொடுப்பது குறித்த தேசிய வேலைத்திட்டம் குறித்து விளக்கினார்.
மாகாண ரீதியாகக் காணப்படும் காணி தொடர்பான பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் அமைச்சர், அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (இ-5)

## ஆச்சிக்கு அரோகரா



காரைநகர் மணல்பிட்டி சிவசுப்பிரமணியர் ஆலய அலங்காரத் திருவிழா ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இதன் போது நேற்று சுமார் 75 வயதுடைய மூதாட்டி ஒருவர் ஆலங்கண்டடி வைரவர் ஆலயத்தில் இருந்து மணல்பிட்டி சிவசுப்பிரமணியர் ஆலயம் வரை செடில் காவடி எடுத்து நேர்த்திகடனை நிறைவேற்றினார். முதுமையின் பிடியில் இருந்த பொதும் காவடி எடுத்து பக்தியை வெளிப்படுத்திய இந்தக் காவடியை பலரும் பார்த்து நெக்குருகினர். (இ)

உடனே நடைமுறைப்படுத்துக!

## ரணில் உத்தரவு



வெள்ளம் மற்றும் மண் சரிவு அனர்த்தம் தொடர்பான இடைக்கால அறிக்கையில் காணப்படும் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்து மாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.
இதற்கமைவாக சர்வதேச தொண்டர் நிறுவனங்கள், மற்றும் ஏனைய முகவர் நிறுவனங்கள் ஊடாக உதவித்தொகையைப் பெற்றுக்கொள்வதற்காக பிரதமரின் செயலாளர் தலைமையிலான குழுவினர் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளனர்.
அதேநேரம் இலங்கை மத்திய வங்கி மற்றும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகியன விரைவாக அனர்த்தப்பதிப்பு குறித்த முழுமையான அறிக்கையொன்றை தயாரிக்குமாறும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார். (இ-5)

## சமரசத்துக்கு முயற்சி



ஜனாதிபதி மைத்தரிபால தரப்புக்கும், மகிந்த ராஜபக்ச தரப்புக்குமிடையே காணப்படும் முரண்பாடுகளுக்கு முடிவு கண்டு, சுதந்திரக்கட்சியை பலப்படுத்தும் முயற்சிகள் தீவிரமடைந்துள்ளன.இருதரப்பு முக்கியஸ்தர்களும் இந்த சமாதான வேலைகளுக்காக பலகட்டப் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.
அதேநேரம் இந்த விடயத்தில் சர்வதேச தரப்புக்கள் சிலவும் தலையீடு செய்து, மைத்திரியையும், மகிந்தவையும் சமரசம் செய்துவைக்க முயல்வதாகவும் கூறப்படுகின்றது. (இ)

## நடத்து தேர்தலை!

அரசாங்கம் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தாததன் மூலம் மக்களின் ஜனநாயக உரிமையை மீறியுள்ளதாக கூட்டு எதிர்க் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.
உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தாமையால், நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ளம், நிலச்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களின் போது துரிதமாக தீர்வுகளை வழங்க முடியாதிருந்தது. இவை குறித்து ஐரோப்பிய ஒன்றியத் தூதுவரிடம் சுட்டிக் காட்டியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.(இ)

## நாளை நாளும் கோளும்

04.06.2017 ஞாயிற்றுக்கிழமை ஏவிளம்பி வருடம் வைகாசி மாதம் 21ஆம் நாள்
தசமி மு.ப. 11.38 வரை | அத்தம் மாலை 06.38 வரை | அமிர்தசித்தயோகம்
இராகுகாலம் 04.22-05.52 | சுபநேரம் 05.52-10.22 | எமகண்டம் 11.52-01.22

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| செலவு | முயற்சி | புகழ் | அலைச்சல் | குழப்பம் | சினம் | பரிசு | சிந்தனை | கவனம் | தடங்கல் | பக்தி | ஓய்வு |

எதிரொலி
Ethiroli

# திருமுருகன் காந்தியை விடுவிக்க வேண்டும்

ஈழத் தமிழர் உரிமைகளுக்காக குரல் கொடுத்து வரும் திருமுருகன் காந்தியையும் , அவரோடு கைது செய்யப்பட்ட மே 17 இயக்கத் தோழர்களையும் தமிழக அரசு உடன் விடுவிக்க வேண்டும் என தமிழ் சிவில் சமூக அமையம் கோரியுள்ளது.

" தமிழர்களினால் தெரிவு செய்யப்பட்ட தமிழக அரசு, ஈழத் தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலையை நினைவு கூருவதற்குத் தடை விதிப்பதும் ஏற்பாட்டாளர்களை கைது செய்து அடைத்து வைத்திருப்பதும் பெரும் மன வேதனையையும் சோர்வையும் தருகின்றது.உடனடியாக நினைவேந்தலை ஒழுங்கு செய்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுதலை செய்யுமாறு ஈழத் தமிழ் சமூக செயற்பாட்டாளர் களின் சார்பில் நாம் தமிழக அரசை வேண்டுகிறோம்' என சிவில் அமையம் சார்பாக கு.குருபரனும், எழில் ராஜனும் இணைந்து வெளியிட்ட அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஆ)

## 6 மாதங்கள் மின்சாரம் இலவசம்



வெள்ளம், மண்சரிவுப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்கள் அடுத்து வரும் 6 மாதங்களுக்கு மின் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என மின் சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் ரஞ்சித் சியாம்பலபிட்டிய அறிவித்துள்ளார்.

'நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் ஒரு இலட்சத்து 77 ஆயிரத்து 775 பேருக்கு மின் விநியோகம் தடைப்பட்டுள்ளது. மேலும் மின்சாரத்தால் பாதிப்பு ஏற்படும் அச்சமுள்ள இடங்களிலும் மின் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு மின்சாரம் வழங்க மின்சார தொழில்நுட்ப பொறியியலாளர்கள் தயாராக வுள்ளனர் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## 'நைசாக' கழன்ற அரசியல்வாதிகள்

வவுனியாவில் இன்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் நடத்தப்பட்ட பேரணியில் அரசியல் பிரமுகர்கள் கலந்து கொள்ளாமல் நழுவிச் சென்றுள்ளனர்.

முற்பகல் 11 மணியளவில் வவுனியா கந்தசுவாமி ஆலயத்தில் காணாமல் போன உறவுகள் நடத்திய பூசையில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் பாஸ்கரா ஆகியோர் கலந்து கொண்டனர். ஆயினும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அமெரிக்க கொடிகளை ஏந்தத் தொடங்கியதும் இந்த அரசியல்வாதிகள் அங்கிருந்து நழுவிச் சென்றுவிட்டனர்.(ஆ)

# அந்த நாள் ஞாபகம்.....!



## 1984.06.03

அமிர்த்சரில் அமைந்துள்ள சீக்கியர்களின் புனிதத்தலமான பொற்கோயிலுக்குள் ஒப்பிரேஷன் ப்ளூஸ்ரார் எனும் பெயரிலான இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு, இந்திய இராணுவத்தினர் உட்புகுந்தனர். இதில் நூற்றுக்கணக்கான சீக்கியமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

# 2.2 கோடி ரூபா

## சீன பௌத்த சங்கம் அன்பளிப்பு




இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ 2 கோடியே 20 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது சீன பௌத்த சங்கம்.

இன்று சனிக்கிழமை காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்த சீன பௌத்த சங்கத்தின் தேரர்கள் இந்த நிதியை அவரிடம் கையளித்தனர்.

பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சீன அரசாங்கமும் உதவிகளை வழங்கியுள்ளது. அதற்காகவும் பௌத்த சங்கத்தின் நிதி உதவிக்காகவும் தேரர்களிடம் தனது நன்றிகளை இதன்போது ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும் அவர்கள் அளித்த நிதி பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடுகளை நிர்மாணிக்கப் பயன்படுத்தப்படும் என்றும் அவர்கள் மீண்டும் இலங்கைக்கு வரும்போது அந்த வீடுகளைப் பார் வையிடலாம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (இ)

# ஹெலியும் ஒருநாள் வண்டியில் ஏறும்






சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கச்சென்ற போது பத்தேகம பிர தேசத்தில் வீழ்ந்த விமானப்படையின் எம்.ஐ. 17 ஹெலிகொப்டர் இன்று மீட்கப்பட்டது.ஹெலி வீழ்ந்த பகுதியில் காலநிலை சீரானதைத் தொடர்ந்து, அதனை மீட்கும் பணி கள் நேற்று முன் தினம் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இன்று பெரிய கன ரக வாகனத்தில் ஹெலியை ஏற்றி விமானப்படையினர் கொண்டு சென்றனர். (அ)

## இளைஞர்கள் மூவர் கைது

500 போதை வில்லைகளுடன் 3 இளைஞர்களை மட்டக்களப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மட்டக்களப்பு கல்லடி பிரதேசத்தில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைப்பற்றப்பட்ட போதை வில்லைகள் 30 ஆயிரம் ரூபா பெறுமதியானவை எனக் கூறப்படுகின்றது. (இ)

## ஆசிரியரால் தாக்குண்டு மாணவன் ஆஸ்பத்திரியில்

10 வயது பாடசாலை மாணவர் ஒருவரை ஆசிரியர் கடுமையாகத் தாக்கியதால் அந்த மாணவன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

நுவரெலியா, கந்தப்பளை பகுதியில் உள்ள ஆரம்ப பாடசாலை ஒன்றில், மாணவர்களுக் கிடையே ஏற்பட்ட மோதலைக் கட்டுப்படுத்த குறித்த ஆசிரியர் அந்த மாணவனைத் தாக்கியுள்ளார். எனினும் அதன் பின்னர் அந்த மாணவன் சிறுநீர் கழிக்க கடும் சிரமப்பட்டுள்ளான்.இந்த நிலையில் மாணவன் நுவரெலியா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளான். (ஆ)

## முகமூடிக்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட குழு கொட்டன்களால் அவரைத் தாக்கிக் காயப்படுத்தியது. பின்னர் அங்கு, 5 பவுண் நகைகளை கொள்ளையிட்ட குழு அந்தக்காணிக்குள் இருக்கும் கடைக்குள்ளும் புகுந்தது. அங்கிருந்த 5 இலட்சம் ரூபாவை முகமுடிக் கொள்ளையர்கள் தம் வசமாக்கினர்.

கொள்ளையர்களின் தாக்குதலால் கடும் காயங்களுக்கு இலக்கான திவாகரன் (வயது 42) சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை உடுத்துறையில் வீடு ஒன்றுக்குள் நுழைந்த இன்னொரு கொள்ளைக்கும்பல் ஒன்றரைப் பவுண் நகையையும், 25 ஆயிரம் ரூபா பணத்தையும் களவாடிச் சென்றுள்ளது. இந்தச் சம்பவமும் இன்று அதிகாலை ஒரு மணியளவிலேயே இடம்பெற்றுள்ளது. இரு சம்பவங்கள் குறித்தும் மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மை நாள்களாக வடமராட்சியில் முகமூடிக் கொள்ளையர்களின் கைவரிசை அதிகரித்துள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர்.(அ-3,11)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 03.06.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.